பார்வோனின் குமாரத்தியே மனம் இரங்கினாள் என்றால், அன்புள்ளம் படைத்த நம் தெய்வம் **இயேசு**, நமக்காக இரங்காமல் இருப்பாரோ? **எந்த பார்வோன் வெட்டும்படி கட்டளையிட்டானோ, அந்த பார்வோனின் குமாரத்தியிடமே மோசே செல்கிறான்.** உங்கள் எதிரியின் முன்பாகவே என் தேவன் உங்களுக்கும் ஒரு பந்தியை ஆயத்தம் செய்வார். உங்களை வெட்டும்படிக்கும், அழிக்கும்படிக்கும் எழும்பும் மனிதர் களுக்கு முன்பாக உங்கள் தலையை தேவன் உயர்த்துவார்!

**அந்தக் குழந்தையை என் தேவன் அனாதையாக விடவில்லை:** அவனைப் பெற்றத் தாயே அவனுக்கு பால் கொடுக்கிறாள். நம்மை அனாதையாக நம் தேவன் ஒருபோதும் விடமாட்டார். அவர் நம்மை விசாரிக்கிறவர். காரணம், மோசேயின் சொந்தத் தாய் அவனிடம் வந்ததுப் போலவே, தேவன் தன் சொந்த குமாரனையே நமக்கு ஈவாய் கொடுத்துள்ளார். அவர் முற்றும் முடிய நம்மை நடத்துவார்! “**தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?**” (ரோமர் 8:32). ஆமென்!

**BOOK POST**

To

If Undelivered Please Return To:
**Miracle Ministry**
Door No-470, Block No-11
Pachaiyappar Road
Mogappair East, Chennai - 600 037



# MIRACLE MINISTRY

## அற்புத ஊழியம்

Editor: Sis. SHANTHI SOLOMON

November - 2021

## அற்புத ஊழியம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்



ஒவ்வொரு சனிக்கிழமையும்
காலை 8-00 மணி முதல்
8-30 மணி வரை

**ஏஞ்சல் TV-யில்**

**Sis. சாந்தி சாலமோன்**
செய்தியளிப்பார்

ஒவ்வொரு மாதமும்
முதல் மற்றும் மூன்றாம்
புதன் கிழமைகளில்
பிற்பகல் 12-00 முதல் 12-30 வரை

**நம்பிக்கை TV-யில்**

**Sis. சாந்தி சாலமோன்**
செய்தியளிப்பார்

# நவம்பர் 2021 - வாக்குத்தத்தம்

## “கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்; நீங்கள் சும்மா இருப்பீர்கள்”

**யாத்திராகமம் 14:14.**

இம்மாதம் இந்த வாக்குத்தத்தம் நம் வாழ்கையில் நமக்கு எதிராக இருக்கும் மனிதர்கள், நம் இருதயத்தை வேதனைப்படுத்தும் மனிதர்கள், நமக்கு தேவையில்லாமல் பிரச்சனைச் செய்யும் மனிதர்கள் மற்றும் நமக்கு விரோதமாக பல செயல்களைச் செய்யும் மனிதர்கள் யாவரையும் காத்தர் ஒரு போதும் சும்மா விடவே மாட்டார். பார்வோனுக்கும், எகிப்தியருக்கும் பயந்து நடுங்கி, கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு வேதனைப்பட்ட இஸ்ரவேலருக்கு மோசே சொன்ன அதே ஜீவனுள்ள வார்த்தையை உங்களுக்கும் கொடுக்கிறேன் நம் வாழ்க்கையிலும், நமக்கு முன்பு நல்லவர்களை போல நடித்து பார்வோனைப் போல உள்ள மனிதர்கள் உண்டு. அவர்களிடம் நாம் ஒன்றும் பேச வேண்டாம். காரணம், நாம் பேசினால் கர்த்தர் பேசமாட்டார். நாம் அமைதியாக இவ்வசனத்தை வைத்து ஜெபித்துக் கொண்டே இருக்கும்போது, நமக்காக நம் தேவன் கால தாமதமானாலும், யுத்தம் செய்துக் கொண்டே இருப்பார்!

2 நாளாகமம் 20:15-ல் சொல்லப்பட்டுள்ளதுப்போல், இந்த யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது. இம்மாதம் நாம் கர்த்தரை விசுவாசித்து, ஜெபித்துக் காத்திருப்போம். கர்த்தர் நம் ஒவ்வொருவருக்காகவும் யுத்தம் செய்வார்!

சாந்தி சாலமோன்

அற்புத ஊழியம் வாசகர்களிடமிருந்து அற்புத ஊழியம் அலுவலகத்திற்கு கடிதங்கள் வந்துக் கொண்டிருக்கிறது. அற்புத ஊழியம் பத்திரிகை, தொலைக்காட்சி, You Tube, Face Book போன்ற நிகழ்ச்சிகளின் மூலம் நீங்கள் பெற்ற ஆசீர்வாதங்களையும், அற்புதங்களையும் எங்களுக்கு எழுத மறவாதீர்கள்.

நிர்வாகி





# நான் கடந்து வந்தப் பாதைகள்

## (Sis. சாந்தி சாலமோன்)

என் அன்பு வாசகர்களுக்கு - அன்பின் வாழ்த்துக்கள்!

கடந்த மாதம் நம்மை கர்த்தர் எப்படிக் கண்ணின் மணியைப்போல் காப்பாற்றினாரோ, அவ்வண்ணமே இம்மாதமும் அற்புதமாக அவர் நம்மை வழி நடத்துவாராக!

நான் கடந்து வந்தப் பாதைகளில் நான் இன்றும் மறக்க முடியாத சில நிகழ்வுகள் உண்டு. அதில் என் பெரிய தங்கை ராணியின் திருமணமும் ஒன்று. அவளுக்கு திருமணம் நடத்தி வைக்க வேண்டும். பெங்களூருவில் உள்ள ஒரு மாப்பிள்ளை. ஒரு டாக்டர் குடும்பத்தைச் சேர்ந்தவர். என் கணவரோடு அந்நாட்களில் ஊழியத்தில் உறுதுணையாக இருந்தவர். நல்ல குணசாலி, பக்தி, இவை அனைத்தையும் அறிந்து, என் தங்கைக்கு திருமணம் முடிக்கப் பேசினோம். இவைகளையெல்லாம் நான் ஒரு தனி மனுஷியாக, ஒரு பெண்ணாக இருந்து, செய்ய வேண்டியதாயிற்று. என்னிடமும் பணமில்லை, என் தாய் ஜெயசீலி பர்னபாஸ் அவர்களிடமும் பணம் இல்லை. இருவரும் என்ன செய்வது என்றுத் தெரியாமல் கலங்கும் வேளையில், என் அம்மாவும், நானும் ஒரு முடிவெடுத்தோம். அண்ணா நகரில் என் தகப்பனார் ஒரு பிளாட் (Plot) வாங்கி இருந்தார். அந்த இடத்தை விற்பதைத் தவிர வேறு வழி இல்லை. அன்று எங்கள் நிலைமை அப்படித்தான் இருந்தது. அந்நிலத்தை விற்கும் முன் என் தாயார் என் கணவரிடம், மகனே, நீங்கள் இந்த நிலத்தை வாங்கிக் கொள்ளுங்கள். குறைந்த விலையில் கொடுக்கிறேன் என்றார்கள். விற்க வேண்டிய நிலைமை, பிள்ளைக்கு திருமணம் நடத்த வேண்டும் என்று வருந்திக் கேட்டார்கள். என் கணவர் எப்போதும் சொல்லும் வார்த்தை, Aunty எனக்கு பூலோகில் வீடு வேண்டாம். என் வீடு பரலோகத்தில் உள்ளது என்று சொல்லி விட்டார். அவர் சொன்னதுப் போலவே, அவரும் பரலோக வீட்டிற்கு விரைந்துச் சென்று விட்டார்.

இப்பொழுதோ, ஒரு சொந்த வீடு இல்லாமல் நாங்கள் கஷ்டப்படுகிறோம். என் தாயார் அந்நாட்களில் குறைந்த விலையில் ரூ.13,000-க்கு அந்த நல்ல இடத்தை விற்றதால், என் தங்கையின் திருமணத்தை நடத்தினோம். அவள் கணவர் பாஸ்டர் ஶ்ரீதர், டாக்டர் ஜஸ்டின் பிரபாகரன் அவர்களின் சபையின் போதகர். என் கணவர் டாக்டர் ஜான் சாலமோன் தான் அவரைப் போதகராக அபிஷேகித்தார். இன்று அல்பா ஒமேகா சபையை உருவாக்கி, அதில் அவரும், அவரது மனைவியும், மகளும், மருமகனும், பேரப்பிள்ளைகளும் நல்ல ஊழியம் செய்து வருகிறார்கள்.

அதன் பிறகு, என் இரண்டாவது தங்கை பிரேமியின் திருமணத்தை நான்தான் நடத்த வேண்டும். ராணி திருமணத்திற்காவது ஒரு வீடு இருந்தது. இவளுக்கு என்ன செய்வது என்று நானும், என் தாயும் ஜெபித்தோம். எனக்கும், என் அம்மாவிற்கும் அந்நாட்களில் ஜெபம் ஒன்றுதான் எங்கள் ஆஸ்தி, சம்பத்து எல்லாமே. எங்கள் கண்ணீர் ஜெபத்தின் மூலம், என் இரண்டாவது தங்கையின் திருமணமும் நடந்தது. டாக்டர் அசோக் குமார் என்ற மணமகனை என் தங்கை திருமணம் முடித்தாள். அவர்களுக்கு இரு பெண் பிள்ளைகளும், பேர குழந்தைகளும் உண்டு. பல விதத்தில் என் தாய் கஷ்டப்பட்டு, தனி மனுஷியாக, என் உதவியுடன் திருமணத்தை சிறப்பாக நடத்தினார்கள்.

என் தாயார் ஒவ்வொரு முறையும் வட்டிக் கடைக்காரரிடம் கடன் வாங்கச் செல்லும் பொழுது என்னையும் அழைத்துச் செல்வார்கள். அங்கு போய் கடன் வாங்கும் போது எங்கள் இருவருக்கும் அதிக வேதனையாக இருக்கும். ஏன் ஆண்டவரே, எங்களுக்கு இந்நிலைமை என்று கதறிக் கதறி அழுத நாட்களை என்னால் மறக்கவே முடியாது. கடன் வாங்கினப் பிறகு, அதை அடைப்பதற்கு என் தாய் பட்ட வேதனைகள் ஏராளம். அப்படிப்பட்ட சமயங்களில், என் கணவர் பல வெளியூர்களுக்கு ஊழியத்தின் நிமித்தம் சென்றுயிருப்பார். திருமணத்தின் அன்றோ, முந்தின நாளோதான் வீடு திரும்புவார். அவருக்கு நாங்கள் எந்த கஷ்டமும் கொடுக்க மாட்டோம். காரணம், பணம் இருந்தால் செலவழிப்பதில் என் கணவரை யாரும் மிஞ்சவே முடியாது. என்னைப் போன்றே, என் நிலைமையில் வாழ்ந்த, வாழ்ந்துக் கொண்டிருக்கும் சகோதர, சகோதரிகளே - இப்படியே உங்கள் நிலைமைப் போய் விடாது, அனைத்துமே விரைவில் மாறி விடும்! எனது கஷ்டப்பட்ட வாழ்க்கையும், கஷ்டப்பட்ட நிலைமைகளும்தான், நான் ஊழியத்தில் நிலைத்து நிற்க பேருதவியாக உள்ளது. மனம் தளராமல் இருங்கள். நான் கடந்து வந்தப் பாதைகள், இப்பொழுது என் வாழ்க்கைக்கு அதிகப் பிரயோஜனமாக உள்ளது.

அடுத்த இதழில் சந்திப்போம்...

சகோதரி சாந்தி சாலமோன



# உங்கள் கவனத்திற்கு

இப்பத்திரிகை தமிழ், ஆங்கிலம் ஆகிய 2 மொழிகளில் தனித் தனியே வெளியிடப்படுகிறது. அற்புத ஊழியத்திற்கு சந்தாவோ, காணிக்கையோ அனுப்ப விரும்புவோர் மணியார்டர் (Money Order) அல்லது காசோலை மூலமாகக் (Cheque or Draft) கீழ்க்காணும் பெயர்களுக்கு அனுப்பவும். Bank Transfer மூலம் அனுப்ப விரும்புவோர், கீழ்க்கண்ட விவரங்களின்படி அனுப்பவும். அனுப்பியப் பின்னர், அனுப்பப்பட்ட உங்கள் விலாசத்தை தயவு செய்து எங்களுக்குத் தவறாமல் தெரியப்படுத்துங்கள். உங்களுக்காக ஜெபிக்கவும், கடிதம் அனுப்பவும் எங்களுக்கு உதவியாக இருக்கும்.

கடந்தப் பல வருடங்களாக உதாரத்துவமான காணிக்கைகளினால் இவ்வூழியத்தைத் தாங்கி வந்த உங்களுக்கு என் இதயப் பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து இவ்வூழியத்தை உங்கள் காணிக்கைகளினாலும், ஜெபங்களினாலும் தாங்குமாறு இச்சந்தர்ப்பத்தில் மிகுந்த அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தனிப்பிரதி: ரூ.10/- ஆண்டு சந்தா ரூ.100/-

**வங்கிக் கணக்கின் பெயர்:**

Miracle Ministry : A/c. No.0974101019647
Shanthi Solomon : A/c. No. 0974101034594
வங்கியின் பெயர் : Canara Bank,
கிளை : Anna Nagar East
IFSC CODE : CNRB0000974
MICR CODE : 600015005

Shanthi Solomon : A/c. No. 40012869208
வங்கியின் பெயர் : State Bank of India
கிளை : Purasawalkam, Chennai-7
IFSC CODE : SBIN0001515
MICR CODE : 600002041
Google-Pay : 6379114745

**அற்புத ஊழியம்**
470, 11-வது பிளாக், பச்சையப்பா சாலை,
முகப்பேர்-கிழக்கு, சென்னை 60037,
044 4867 8077 9940271077

## "தண்ணீரில் மிதந்த மோசேக்கு ஒரு வழியை உருவாக்கின தேவன் - கண்ணீரில் மூழ்கியுள்ள உங்களுக்கும் அற்புதம் செய்வார்!"

அற்புத ஊழியம் பத்திரிகையை வாசிப்பவர்களுக்கு என் தேவன் எப்படி அற்புதம் செய்யாமல் இருப்பார்? நிச்சயம் அற்புதம் உண்டு என்று விசுவாசித்து, ஜெபத்துடன் இச்செய்தியை வாசித்து, தியானியுங்கள்.

மோசே யார்? இஸ்ரவேல் ஜனங்களைப் பாலும், தேனும் ஓடும் கானான் தேசத்திற்கு வழி நடத்திச் சென்ற ஒரு மாபெரும் தலைவன். வலிமை வாய்ந்த ஒரு மனிதன். லேவி கோத்திரத்தான் அம்ராமின் குமாரன். இவன் பிறந்து மூன்று மாதத்தில் வேறு வழியின்றி இவன் தாயானவள் ஒரு நாணற்பெட்டியை எடுத்து, அதற்கு பிசினும், கீலும் பூசி அதிலே பிள்ளையைக் கிடத்தி, நதியோரமாய் நாணலுக்குள்ளே வைத்தாள். காரணம், பார்வோன், பிறக்கும் ஆண் பிள்ளைகளையெல்லாம் நதியிலே போட்டுவிடவும், பெண் பிள்ளைகளையெல்லாம் உயிரோடு வைக்கவும் தன் ஜனங்களுக்குக் கட்டளையிட்டான். அந்தத் தண்ணீர்தான் அவனுக்கு ஒரு வழியைப் பிறப்பித்தது. எனக்கு அருமையானவர்களே, தாரை, தாரையாய் வடிக்கும் உங்கள் கண்ணீருக்கும் என் தேவன் ஒரு வழியை நிச்சயம் காண்பிப்பார்!

**தண்ணீர்:** மோசே தண்ணீரில் மிதக்கவில்லையேல், மரித்திருப்பான். தண்ணீரில் போடப்பட்ட எத்தனையோ ஆண் பிள்ளைகள் தண்ணீரில் மரித்திருப்பார்கள். ஆனால், இப்பிள்ளை எப்படி இப்படியொரு அற்புதமாக காப்பாற்றப்பட்டதென்றால், அதற்கு மூலக் காரணம் இவனின் தாய். மூன்று மாதம் கஷ்டப்பட்டு பிள்ளையை ஒளித்து வைத்தாள். அது அழகுள்ளது (யாத்திராகமம் 2:2) என்று கண்டு ஒளித்தாள். அதின் அர்த்தம் - அவன் ஒரு வேளை அழகில்லை என்றால், அதை நதியிலே பிறந்தவுடன் போட்டிருப்பாள். இந்த அழகு இன்று இவ்வுலகில் அநேகரின் வாழ்க்கையில் வேதனையை விளைவிக்கிறது. அழகில்லையேல், வேலை இல்லை, மாப்பிள்ளை இல்லை, பெண் இல்லை, மதிப்பு இல்லை என்று உலகம் கொடுக்கும் முக்கியத்துவம் அழகுதான். ஆனால், இக்குழந்தை அழகாக இருந்தும், அப்பெண்ணால் ஒன்றும் செயய முடியவில்லை. தூக்கி நதியில்தான் போட முடிந்தது. இவ்வுலகப் பிரகாரமான காரியங்கள், இவ்வுலகப் பிரகாரமான ஆசாபாசங்கள், இவ்வுலகச் சிற்றின்பங்கள் இவை எல்லாம் மூழ்கி போகக் கூடியது.



ஆனால், ஆவிக்குரிய அழகும், ஆவிக்குரிய குணங்களும், ஆவிக்குரிய பெருமைகளும் நம்மை உயர்த்தக் கூடியது.

**தண்ணீர் அவன் வாழ்க்கையை மாற்றிற்று:** இச்செய்தியை வாசிக்கும் சகோதர, சகோதரிகளே, இனி அழுவதற்கு என் கண்களில் கண்ணீர் கூட இல்லை, எல்லாம் வற்றிப் போயிற்று என்று கருதும் கர்த்தருடையப் பிள்ளைகளே, உங்கள் வற்றிப் போன வாழ்க்கையின் நிலைமை இன்று ஆசீர்வாதமாகும். மரித்துப்போக வேண்டிய பிள்ளை ஜீவன் பெற்றது. சுவையற்ற, மணமற்ற, நிறமற்ற தண்ணீர் மோசேயை மலரச் செய்தது. தண்ணீர் என்றால் சிலர் வேறு ஒரு தண்ணீரை நினைப்பார்கள் (மது). சிலருக்கு இரவும், பகலும் இதுவே ஞாபகம். இது மனிதர்களை சாகடிக்கும் தண்ணீர். ஆனால், நம் தேவன் நமக்கு அருளும் தண்ணீர் "**ஜீவத் தண்ணீர்**" அது ஜீவனைக் கொடுக்கும். தண்ணீரில் மிதந்த மோசே மீட்கப்பட்டான். யாரால்? அவன் ஜீவனைக் காப்பாற்ற, கர்த்தரால் முன் ஏற்பாடாய் நியமிக்கப்பட்ட பார்வோன் குமாரத்தியால்தான். அவள் கண்களில் அந்த நாணல் பெட்டியைக் கர்த்தர் காணும்படிச் செய்தார். கர்த்தரின் கண்கள் பூமி எங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது. அவர் நம் ஒவ்வொருவரையும் காண்கிறார். விசேஷமாக இரவும், பகலும் கர்த்தரை நோக்கிப் பார்க்கும் பிள்ளைகளைக் கவனிக்கிறார். கர்த்தருடைய கண்கள் நம்மீது எப்போதும் நோக்கமாயிருக்கிறது. மோசேயைக் காப்பாற்ற பார்வோன் குமாரத்தியை, அதுவும் ஒரு ராஜ குமாரத்தியை அனுப்பினதுப் போல், நம்மைக் காப்பாற்றவும், நம் தேவைகளைச் சந்திக்கவும் யாரையோ நம் தேவன் அனுப்பிக் கொண்டிருக்கிறார். யாருக்கோ நம்மைக் குறித்து ஞாபகப்படுத்துகிறார். இனி ஒருவரின் கண்ணும் நம்மீதுப் படுவதில்லை!

**பெட்டியைத் திறந்தபோது, பிள்ளையைக் கண்டாள்:** பெட்டிக்குள் ஏதோ இருக்கும் என்று பார்வோனின் குமாரத்தி நினைத்திருக்கலாம். பெட்டியைத் திறந்தபோது அதிலே பிள்ளையைக் கண்டாள். வீட்டை விட்டு வெளியேற முடியாமல் நொறுக்கப்பட்டு, அடைக்கப்பட்டுக் கிடக்கும் உங்கள் வாழக்கையை திறக்க என் தேவன் வருகிறார்!

**பெட்டியைத் திறந்தபோது பிள்ளை அழுதது:** அவள் அதின் மேல் இரக்கமுற்றாள். எனக்கன்பானவர்களே, உங்கள் இருதயத்தை தேவனிடம் திறவுங்கள். அவர் உங்களைக் காண்பவர். உங்களுக்காக பரிதபிப்பவர். நம் கண்களில் உள்ள கண்ணீரை தேவ சமூகத்தில் ஊற்றுவோம். அந்த பிள்ளை அழுத போது, அதைப் பார்த்த சாதாரண